**தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி**

**"அனைவரும் கற்போம்''** **" அனைவரும் உயர்வோம்''**

**அனுப்புநர்**

**மாநில திட்ட இயக்குநர்,**
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி ,
கல்லூரிச் சாலை,
சென்னை– 600 006.

**பெறுநர்**

**முதன்மைக் கல்வி அலுவலர்,**
**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,**
அனைத்து மாவட்டங்கள்.

**ந.க.எண். 2013/ B6 / கட்டடம் /ஒபக / 2021 நாள் 27.08.2021.**

பொருள் : ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி – மத்திய கல்வி அமைச்சகம் – " தூய்மை நிகழ்வுகள்" 2021 – பள்ளிகளில் சுகாதாரம் சார்ந்த விழிப்புணர்வு குறித்த நிகழ்ச்சிகள் நடத்துதல் – சார்பு.

பார்வை : புது டெல்லி, மத்திய கல்வி அமைச்சகம், செயலர் அவர்கள் கடிதம் எண் எப் – 27 – 3 / 2021 – IS-9 நாள் 26.08.2021.

*******

பார்வையில் கண்ட கடிதத்தின் படி "தூய்மையான நிகழ்வுகள் 2021" திட்டத்தின் அடிப்படையில் அனைத்து பள்ளிகளிலும் பள்ளி சுகாதாரம் சார்ந்த விழிப்புணர்வு குறித்த நிகழ்வுகள் நடத்திட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி 2021 செப்டம்பர் 1 முதல் 15 வரையிலான நிகழ்வுகளை இணைப்பில் கண்ட விவரப்படி அனைத்து பள்ளிகளிலும் நடத்திட பள்ளிகளுக்கு உரிய அறிவுரை வழங்கிடுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு :** நிகழ்ச்சி நிரல்

27/08/2021.

**மாநிலத் திட்ட இயக்குநருக்காக**

27/8/21

**ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, தமிழ்நாடு**

**"தூய்மை நிகழ்வுகள்"– 2021**

**நிகழ்ச்சி நிரல் விவரம் (செப்டம்பர் 1 முதல் 15 வரை)**

**முக்கிய குறிப்பு : தமிழக அரசால் வழங்கப்பட்டுள்ள COVID 19 பெருந்தொற்று வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி, இத்தூய்மை நிகழ்வுகளை மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் நேரடியாகவோ அல்லது வீட்டிலிருந்தவாறு காணொலி வாயிலாகவோ பங்கேற்கச் செய்திடலாம்.**

| | | |
|---|---|---|
| 01.09.2021 | புதன் கிழமை | தூய்மை உறுதி மொழி தினம் |

- அனைத்து மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பாதுகாப்பான சமூக இடைவெளியில் பங்கெடுத்து தூய்மை குறித்தான (COVID விழிப்புணர்வு உட்பட) உறுதி மொழியை எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யலாம். (Virtually or physically with social distancing)
- துறை / நிறுவனங்கள் / பள்ளிகளின் வலைதளங்களில் தூய்மை / COVID விழிப்புணர்வு சார்ந்த வாசகங்களை வெளியிடுதல்.
- தூய்மை விழிப்புணர்வு வாசகங்களை மின்னணு விளம்பரப் பலகைகளாக உருவாக்கி அதனை வாயிலாக துறையின் / மாநிலத்தின்web portal–ல் வெளியிடலாம். மேலும் சமூக ஊடகங்களின் வாயிலாகவும் விளம்பரம் செய்யலாம். (Social media, as well as electronic and print media)
- **மாவட்டம் வாரியாக உறுதி மொழி ஏற்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 3.00 மணிக்குள்ளாக)**

| | | |
|---|---|---|
| 02.09.2021 | வியாழக் கிழமை | தூய்மை விழிப்புணர்வு தினம் |

- பள்ளி மேலாண்மைக் குழு / பள்ளி மேலாண்மை வளர்ச்சிக் குழு / பெற்றோர் ஆசிரியர் கழகக் கூட்டத்தினை virtual ஆக நடத்தி, சுத்தம் மற்றும் சுகாதாரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தலாம். கைகழுவுதல் மற்றும் முகக்கவசம் அணிவதன் அவசியம், பாதுகாப்பான சமூக இடைவெளி சார்ந்து மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் தங்கள் பள்ளி மற்றும் வீட்டில் இப்பழக்க வழக்கங்களை மேற்கொள்ளும் வகையில் ஊக்குவித்தல்.
- பள்ளியில் உள்ள ஒவ்வொரு பகுதியையும் ஆசிரியர்கள் ஆய்வு செய்து அதனைச் சுத்தம் செய்திடத் தேவையான முன்மொழிவுகளையும், திட்டங்களையும் தயார் செய்தல்.
- ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள், உள்ளூர் பிரதிநிதிகளோடு இணைந்து COVID சார்ந்தும், தூய்மை நிகழ்வுகள் சார்ந்தும் விழிப்புணர்வு விவரங்களைப் பற்றி கலந்துரையாடுதல். COVID19 என்பது Water, Sanitation andHygiene (WASH) குறித்தான அணுகுமுறை என்பதால் கைகழுவும் வசதி, தினசரி கழிவறைகளை சுத்தப்படுத்துதல் மற்றும் கிருமி நாசினி பயன்படுத்துதல், கழிவறை பயன்பாடு, குடிநீர் பயன்பாடு, காற்றோட்டம், கழிவுகள் மேலாண்மை, இயக்குதலும் பராமரித்தலும் முதலியன சார்ந்து கலந்துரையாடலாம். இவற்றுள் மாணவ, மாணவியருக்கென சுத்தமான தனித்தனிக் கழிவறைகள், சோப், கைகழுவும் கிருமி நாசினி மற்றும் பாதுகாப்பான தண்ணீர் அளித்தல், குறிப்பிட்ட நோக்கத்திற்காக PPE பயன்ப்படுத்துதல், தூய்மைப் பணியாளர்களை நியமித்தல் போன்றவையும் அடங்கும்.
- Jal Jeevan Mission 100 நாட்கள் பிரச்சாரத்தின் வாயிலாக பள்ளிக்கு தண்ணீர் வழங்கும் குழாய் இணைப்புகளை ஆய்வு செய்தல்
- பள்ளியில் தண்ணீர் சேகரிக்கும் முறை மற்றும் அமைப்புகளை சோதித்து அதற்கான திட்டத்தினை Catch the rain பிரச்சாரத்தின் வாயிலாக தயார் செய்தல். (நவம்பர் 2021 வரை)
- கழிவறைகள், சமையலறை, வகுப்பறைகள், மின்விசிறி, கதவுகள், ஜன்னல்கள், புதர்கள் ஆகியவற்றை மிகவும் சுத்தமாக பராரித்தல் மற்றும் கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்யத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல். பள்ளி வளாகம் மற்றும் சுற்றுப்புறத்தைச் சுத்தம் செய்திட உரிய நடவடிக்கை எடுத்தல். மேற்குறிப்பிட்ட நிகழ்வுகளையும் COVID19 தடுப்பு முறைகளையும் பொதுமக்களோடும் உள்ளுர் பிரதிநிதிகளோடும் இணைந்து சிறு குழுக்களாக பங்கேற்றல். **(COVID 19 பெருந்தொற்று வழிகாட்டு நெறிமுறைகளை கட்டாயமாக**

<table>
<tr><td colspan="3">பின்பற்ற படவேண்டும்)
<ul>
<li>பழைய கோப்புகளை உரிய வழிமுறையில் தீர்வு செய்தல்/ அழித்தல்.</li>
<li>வீணாகும் அனைத்து விதமான கழிவுப் பொருட்களான, உடைந்த நாற்காலிகள், பயன்பாட்டில் இல்லாத உபகரணங்கள், பழுதடைந்த வாகனங்கள், முதலிய பொருட்களை பள்ளி வளாகத்திலிருந்து அப்புறப்படுத்துதல்</li>
<li>மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)</li>
</ul></td></tr>
<tr><td>03.09.2021</td><td>வெள்ளிக் கிழமை</td><td>சமூக விழிப்புணர்வு தினம்</td></tr>
<tr><td colspan="3"><ul>
<li>மாணவர்களிடையே தூய்மை மற்றும் COVID19 பெருந்தொற்று காலத்தில் பாதுகாப்பான நடத்தை குறித்து பெற்றோர்களுக்கு (Virtually or physically) காணொலி அல்லது சிறு குழு கூட்டத்தின் வாயிலாக கருத்தரங்குகள் நடத்தலாம்.</li>
<li>ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் உள்ளூர் பிரதிநிதிகள் தூய்மை நிகழ்வுகள், COVID19 கால தடுப்பு முறைகள், தடுப்பூசி குறித்த விழிப்புணர்வு ஆகியன சார்ந்து அருகாமையில் உள்ள கிராம பொதுமக்களுக்கு எடுத்துரைத்தல்.</li>
<li>மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்த ஆசிரியர்களின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)</li>
</ul></td></tr>
<tr><td>04.09.2021 - 05.09.2021</td><td>சனிக்கிழமை – ஞாயிற்றுக் கிழமை</td><td>பசுமைப் பள்ளி இயக்க நாட்கள்</td></tr>
<tr><td colspan="3"><ul>
<li>COVID19 கால தடுப்பு முறைகள், தடுப்பூசி குறித்த விழிப்புணர்வு, தண்ணீர் சேகரிப்பு, ஒருமுறை பயன்படுத்தும் நெகிழி பயன்பாட்டை தடை செய்தல் சார்ந்த நிகழ்வுகளை புகைப்படம், ஓவியங்கள், கார்டூன்கள், முழக்கங்கள் போன்றவைகளை தயாரித்துப் பள்ளியில் கண்காட்சி ஏற்பாடு செய்து பெற்றோர்கள் மற்றும் சமுதாய உறுப்பினர்களை பள்ளி திறப்பிற்கு பின் அழைத்து காணச் செய்தல்.</li>
<li>தண்ணீர் சேகரிப்பு மற்றும் நீர் ஆதாரங்களை பற்றி மாணவர்களிடையே விழிப்புணர்வு உண்டாக்குதல். ஒவ்வொரு மாணவரும் குறைந்தபட்சம் ஒரு நாளைக்கு ஒரு லிட்டர் நீரை சேமிக்க வைத்தல். மேலும் பள்ளி மற்றும் வீட்டில் சிக்கனமாக தண்ணீரை பயன்படுத்தி குறைந்த பட்ச தண்ணீர் வீணாவதை உறுதி செய்திட ஊக்குவித்தல்.</li>
<li>மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்த பள்ளிகளின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)</li>
</ul></td></tr>
<tr><td>06.09.2021 - 07.09.2021</td><td>திங்கள் கிழமை –<br>செவ்வாய்க்கிழமை</td><td>தூய்மை நிகழ்வுகளில் பங்கேற்றல்</td></tr>
<tr><td colspan="3"><ul>
<li>COVID 19 பெருந்தொற்று வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி தூய்மையான பள்ளிச் சுற்றுப் புறம், மற்றும் கழிவறைகளை சுத்தமாக பராமரித்தல் சார்ந்து மாவட்ட / வட்டார / குறு வள மைய அளவில் போட்டிகள் நடத்தலாம்.</li>
<li>மாணவர்களுக்கு தூய்மை சார்ந்து ஓவியப் போட்டி, நாடகம், பாட்டு, வாசகங்கள் உருவாக்குதல் ஆகிய போட்டிகள் நடத்தலாம்.</li>
<li>‘COVID 19 responsive school’ – “COVID 19 பெருந்தொற்றிற்கு பதிலளிக்ககூடிய பள்ளி” என்ற தலைப்பில் கடிதம் மற்றும் கட்டுரைப் போட்டி நடத்துதல்.</li>
<li>மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பரம் வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)</li>
<li>மாவட்டம் வாரியாக ஓவியப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டியில் பங்கேற்ற மொத்த மாணவர்களின் எண்ணிக்கையினையும் 10 சிறந்த ஓவியப் போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி தாள்களின் தெளிவான புகைப்படங்களை மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)</li>
</ul></td></tr>
<tr><td>08.09.2021</td><td>புதன் கிழமை</td><td>கை கழுவும் தினம்</td></tr>
<tr><td colspan="3"><ul>
<li>அன்றாட வாழ்க்கையில் சரியாக கை கழுவும் முறை சார்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.</li>
<li>உணவுக்கு முன்னரும் உணவு உட்கொண்ட பின்னரும் குழந்தைகள் முறையாக சோப்பைக் கொண்டு கைகழுவுவதைக் கற்பித்தல்.</li>
<li>மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கு ஏற்ற வகையில் குடிநீர் மற்றும் கழிவறைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதை கண்காணித்து உறுதி செய்தல்.</li>
</ul></td></tr>
</table>

- தண்ணீர் வீணாவதைக் கண்டறிதல் / தடுத்தல் குறித்து மாணவர்களுக்கு கற்பித்தல்.
- கைகழுவும் தண்ணீரை தோட்டத்திற்குப் பயன்படுத்த வழிவகை செய்தல்.
- தண்ணீர் வாயிலாக பரவும் நோய் தொற்று மற்றும் முறையான குடிநீர் பயன்பாடு குறித்து அறியச் செய்து அதன் வாயிலாக மாணவர்களுக்கு தன்சுத்தம் மற்றும் கைகளையும் சுத்தமாக வைத்திருப்பது சார்ந்து விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- **மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)**

| | | |
|---|---|---|
| 09.09.2021 - 10.09.2021 | வியாழக்கிழமை – வெள்ளிக்கிழமை | தன் சுத்தம் மற்றும் சுகாதார தினம் |

- காணொளி/ஒலி நிகழ்ச்சிகள் வாயிலாக மாணவர்கள்/பணியாளர்கள் மற்றும் பொது மக்ககளை தூய்மையைப் பேண ஊக்குவித்தல்.
- மாணவர்கள் தங்கள் கை, கால் நகங்களை வெட்டி சுத்தமாக பராமரித்தல், தினசரி குளிப்பதற்கு சுத்தமான நீரை பயன்படுத்துதல், சுத்தமான ஆடைகள் அணிதல், வெட்ட வெளியில் எச்சில் துப்பாதிருத்தல், காலணி அணிதல் சார்ந்து கற்பிக்க வேண்டும். (கோவிட்19 காலங்களில் முகக்கவசம் முறையாக அணிதல், கைகுலுக்குதலை தவிர்த்தல், சுவாச சுத்தம், உணவு மற்றும் சொந்த பொருட்களை பிறரோடு பகிர்வதை தவிர்த்தல், கூட்டங்களை தவிர்த்தல்)
- குடிநீர் வசதி மற்றும் கழிவறை வசதிகளை சுகாதாரமான முறையில் மாணவர்கள் பேணுவதை உறுதி செய்தல்
- மாணவர்கள் தினசரி இருமுறை பல் துலக்குவதின் முக்கியத்துவத்தை உணர்ந்து தொடர்ந்து அப்பழக்கத்தை கடைபிடித்தல்.
- **மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)**

| | | |
|---|---|---|
| 11.09.2021 - 12.09.2021 | சனிக்கிழமை – ஞாயிற்றுக் கிழமை | தூய்மை நிகழ்வுகள் சார்ந்த கண்காட்சிகள் தினம் |

- சுத்தம் சார்ந்த நிகழ்வுகளை மற்றும் கோவிட் பெறுந்தொற்று காலத்தில் பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் சார்ந்த புகைப்படம், ஓவியங்கள், கார்டூன்கள், வாசகங்கள் போன்றவைகள் மாணவர்களால் தயாரிக்கப்பட்டு பள்ளி அல்லது கல்வித் துறையின் வலைதளங்களில் பதிவேற்றம் செய்தல்.
- சில சிறந்த நிகழ்வுகளை மாநில அளவில் தொகுத்து காட்சிப்படுத்துதல்.
- மறுசுழற்சி செய்யத்தக்க வகையில் உள்ள மூலப்பொருட்களைக் கொண்டு கலைப்பொருட்கள் தயாரித்தல். உதாரணமாக உள்ளூர் கலாச்சாரங்களை ஊக்குவிக்கும் விதமாக கலைநுணுக்கத்துடன் கூடிய குப்பைத் தொட்டிகள் உருவாக்குதல்.
- **மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)**

| | | |
|---|---|---|
| 13.09.2021 - 14.09.2021 | திங்கள் கிழமை – செவ்வாய்க்கிழமை | பள்ளித் தூய்மை சார்ந்த செயல் திட்டம் |

- பள்ளி மேலாண்மைக் குழு / பள்ளி மேலாண்மை வளர்ச்சி குழு மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் கிராம பொதுமக்களுக்கு பள்ளியின் தூய்மை சார்ந்த செயல் திட்டம் குறித்து (SAP) விழிப்புணர்வு ஏற்படுத்துதல்.
- குழந்தைகள் பாராளுமன்றம் மற்றும் பள்ளி அமைச்சரவை போன்ற சிறிய கூட்டங்கள் நடத்தி தூய்மை நிகழ்வுகள் சார்ந்து விவாதித்தல்.
- பள்ளி மேலாண்மைக் குழு மற்றும் மாணவர்களை ஊக்குவித்து இந்த தூய்மை சார்ந்த நிகழ்வுகளை மேலும் எவ்வாறு சிறப்பாக நடத்தலாம் என்பது குறித்து கலந்தலோசித்து அதனை தொகுத்து மாநிலத் திட்ட இயக்ககத்திற்கு பரிந்துரை செய்யலாம்.
- **மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)**

<table>
<tr><td>15.09.2021</td><td>புதன் கிழமை</td><td>பரிசுகள் வழங்கும் தினம்</td></tr>
<tr><td colspan="3">

- ஓவியம், கட்டுரை, விவாத மேடை மற்றும் வினாடி–வினா போன்ற போட்டிகளை நடத்தி அவற்றில் பங்கேற்றமைக்காக மாணவர்கள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்குதல். (காணொலி வாயிலாக பரிசுகளை அறிவிக்கலாம், Digital Certificates வழங்கலாம். நேரடியாக பரிசுகள் வழங்குதலை தவிர்த்து பள்ளி திறப்பிற்கு பின் வழங்கலாம்.)
- அனைத்து பள்ளிகளிலும் நடைபெற்ற "தூய்மை நிகழ்வுகள்" நிகழ்ச்சி சார்ந்த சிறப்பான நிகழ்வுகள் மாவட்ட மற்றும் மாநில அளவில் தொகுக்கப்பட்டு வலைத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட வேண்டும்.
- **மாவட்டம் வாரியாக பங்கேற்ற மொத்தப் பள்ளிகளின் எண்ணிக்கையினையும் புகைப்படம், வீடியோ மற்றும் விளம்பர வாசகங்களையும் மாநிலத் திட்ட அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கவும். (மாலை 4.00 மணிக்குள்ளாக)**

</td></tr>
</table>